வித்தியா வர்த்தமானி

G

JL
Tm211, M96Vr.
M98.3.1.
220765

220765

Registered No. M.—75.

THE TAMIL JOURNAL OF EDUCATION MADRAS.

சென்னை

வித்தியா வர்த்தமானி.

VOL. III. No. 1.] OCTOBER 1898. [புத். ௩. செ. ௧.

CONTENTS.

		Page.
I.	Editorial Notices ...	1
II.	The wretched state of School children in England ...	4
III.	Notes about Kerosine oil	9
IV.	News and Notes ...	12
V.	Notes of lesson on trees	13
VI.	Gazette Notifications	16

அட்டவணை.

		பக்கம்.
1.	பத்திராதிபரின் குறிப்புகள் ...	1
2.	ஆங்கிலேயநாட்டில் பள்ளிப்பிள்ளைகளின் பரிதாபநிலைமை ...	4
3.	கெரோஸின் எண்ணெயைப்பற்றி ...	9
4.	வர்த்தமானக்குறிப்புகள் ...	12
5.	மரங்களைக்குறித்தபாடம்	13
6.	கெஜட்டுவிளம்பரங்கள் ...	16

	Rs. A. P.
For Patrons (minimum)	3 0 0
Annual Subscription in advance.	1 8 0

[Single copy 8 annas.]

	ரூ. அ. பை.
அத்தியக்ஷகர்களுக்கு (குறைந்தது)	3 0 0
வருஷத்திய கையொப்பம் முன்னிட்டுச்செலுத்தவேண்டும்	1 8 0

ஒருபத்திரிகை விலை 8-அணா.

Edited by K. PARTHASARATHY AIYENGAR.

Printed at the City Press, Madras.

OPINION.

No. 1435.

Office of the Sub-Asstt. Inspector of Schools,
Pollachi Range,
Perumtholuva, 16th October, 1898.

rom

M. R. Ry.,
C. RAMALINGA AIYAR Avergal,
Sub-Asstt. Inspector of Schools, Pollachi Range.

To

THE MANAGER,
Tamil Journal of Education,
MADRAS.

ir,

I have the honor to inform you that your letter No. $\frac{1263}{4\text{-}10\text{-}98}$ and its nclosures have been forwarded to the President of the Taluk Board with my recommendation, copy of which is annexed for your information.

2. I have to-day instructed the Secretary Teachers' Association, Pollachi, of which I am the President, to subscribe for your Journal for as many copies as are required.

Copy of recommendation, dated the 16th October 1898, No. 1434.

"Forwarded to the President, Taluk Board, Pollachi, and recommended for use in all Board Primary Schools."

"The Journal contains all the important departmental proceedings and orders connected with primary education which will be a very useful guide to the masters, who are at present ignorant of what goes on in the educational world. The language of the Journal is simple, being written in conversational style, which is well within the capacities of the little ones for whom it is exceedingly suitable. The Editor's name itself is a sufficient guarantee, and on a careful perusal of the Journal, one cannot but say that he has used his experience to the greatest advantage and laid the teacher-population under a deep debt of gratitude to him. It is, besides, much cheaper than the Tamil magazine now subscribed for by the Board for their schools."

I have the honor to be,
Sir.
Your most obedient servant,
C. RAMALINGA AIYAR,
Sub-Assistant Inspector of Schools, Pollachi R

THE
TAMIL JOURNAL OF EDUCATION,
MADRAS.

சென்னை
வித்தியா வர்த்தமானி.

புத். 3.] 1898ளு அக்டோபர்மீ. [இல. 1.

பத்திராதிபரின் குறிப்புகள்.

நமது பத்திரிகை.

நாம் நமது பத்திரிகையைப் பிரசுரிக்கத் தொடங்கிச் சென்ற மாதத்திய சஞ்சிகையுடன் சரியாக இரண்டு வருடங்கள் பூர்த்தியாயின. இவ்விருவருடங்களிலும் நாம் இந்நாட்டின் வித்தியாபிவிருத்தி விஷயமாக இடைவிடாதுழைத்து வந்ததின் பயன் சிறிதும் பயனற்றதாகாமல் நமது கருணைநிறைந்த சென்னை கவர்ன்மெண்டார் வித்தியா விசாரணைத்தலைவர் அவர்கள், அனேக பரிசோதனதிகாரிகள், பல மிஷன்பாடசாலைகளின் தலைவர்கள், சிற்சில இதரபாடசாலைகளின்மானேஜர்கள் முதலியவர்களால் கண்ணியமாகவே கண்காணிக்கப்பட்டு வருவதைப் பார்க்க அத்தியந்த மகிழ்ச்சியடைகின்றனம். அவர்களுடைய பேருதவி நமக்கு மேன்மேலும் அதிகமாகக்கிடைத்து வருவதால்தான் நாம் மேற்கொண்ட இந்நற்கருமம் யாதொரு இடையூறுக்கு முள்ளாகாது ஒழுங்காக நடந்தேறிவருகிறது. ஆதலால் இச்சமயத்தில் அவர்களனைவர்களுக்கும் நம்முடைய நன்றியறிதலுள்ள வந்தனத்தைச் செய்யக்கடமைப்பட்டிருக்கிறோம். சென்ற வருஷத்தில் இப்பத்திரிகையைப் பதிப்பித்து வந்த அச்சுயந்திரசாலை மிகச் சிறியதாதலால் சிலமாதங்களின் சஞ்சிகைகள் அதிக காலாதீதமாகவெளிவர நேர்ந்தன. இவ்வருஷத்தில் நாம் அவ்வாபீசை மாற்றிவிட்டதினால் இனி அந்தந்த மாதத்திய சஞ்சிகைகள் அவ்வம்மாதத்திலேயே தடையின்றி வெளியாகும். மேலும், இம்மூன்றும்வருஷத்திய சஞ்சி

கைகளில் கிண்டர்கார்டன் போதனா முறையைப்பற்றியும், வேறு பல முக்கிய விஷயங்களைப் பற்றியும் அதிகமாக எழுதவாலோசித்திருப்பதால் அவை கிராம பாடசாலை யுபாத்தியாயர்களுக்கு மிகப்பயனுள்ளவைகளாக விருக்குமென்று உறுதியாக நம்புகிறோம். சென்றவருஷத்தில் இப்பத்திரிகைக்கு உபயோகமான பல விஷயங்களெழுதி, இதைச்சிறப்பித்த நம் கடித நேயர்கள் இவ்வாண்டிலும் தங்கள் தங்களாற்கூடிய உதவியைத் தாராளமாய்ச் செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

நமது வித்தியாவிசாரணைத்தலைவர் அவர்களும், பெண்கல்வியும்.

நமது வித்தியாவிசாரணைத்தலைவர் அவர்களாகிய ஹானரபல் டாக்டர் டங்கன் துரையவர்கள் சென்ற ஜூலைமீ 9உ கடப்பை ஜில்லாவிலுள்ள மதனபல்லிக்கு விஜயஞ்செய்தபோது அங்காவாசிகள் அவருடைய நல்வரவைக்கோறியோர் வந்தனோபசாரபத்திரம் படித்தனர். அதிற்கண்ட அனேக விஷயங்களில், அச்சில்லாவில் பெண்கல்வி மிகக்குறைவாக விருக்கிறதென்றும், அவர்களுடைய கல்வியபிவிருத்தியின் பொருட்டு நூதனமாகச் சில கவர்ன்மெண்டு பாலிகா பாடசாலைகளை ஏற்படுத்தவேண்டுமென்றும் கோறிக்கொண்ட அம்சம் வெகு முக்கியமானது. அவ்விஷயத்தைச்சுட்டி நமது வித்தியாவிசாரணைத்தலைவர் அவர்கள் விடைபகர்கையில் இவ்விராஜதானியில் பாலிகாபாடசாலைகளுக்கென்று இரண்டு இனிஸ்பெக்டரஸ்கள் தானிருக்கின்றனரென்றும், அவர்களுடைய நிர்வாகத்திற்கு அதிகமாகவே அனேக பாலிகா பாடசாலைகள் ஏற்பட்டிருப்பதால் அவர்கள் அவைகளை நிர்வகிப்பதற்கும், பரீட்சிப்பதற்கும், தங்கள் சக்திக்கு மிஞ்சியுழைக்கவேண்டியிருப்பதாக முறையிடுகின்றனரென்றும் கூறியதோடு இவ்விராஜதானியில் குறைந்தது இன்னம் இரண்டொரு இனிஸ்பெக்டரஸ்களைப் புதிதாக ஏற்படுத்தினாலல்லது அதிகமாகப் பாலிகாபாடசாலைகளை ஏற்படுத்துவது மிகக்கஷ்டமாக முடியுமென்றும் சொன்னார். டாக்டர் டங்கன் துரையவர்கள் கூறியது முற்றும் உண்மையே. இவ்விராஜதானியில் ஆண்பிள்ளைகளின் பாடசாலைகளுக்காக நான்கு இனிஸ்பெக்டர்களும், ஒன்பது அசிஸ்டாண்டு இனிஸ்பெக்டர்களும், ஐம்பத்தோரு சப்-அஸிஸ்டாண்டு இனிஸ்பெக்டர்களுமிருக்கையில் பாலிகாபாடசாலைகளுக்குமட்டும் இரண்டு இனிஸ்பெக்டரஸ்களும், ஆறேஆறு சப்-அஸிஸ்டாண்டுகளுமிருப்பது மிகவும் பரிதபிக்கத்தக்கதே. ஹானரபல் டாக்டர் டங்கன் துரையவர்கள் வித்தியா விசாரணைத்தலைவராக விருக்கும் இக்காலத்தில் கல்வியில் பின்னிட்டவர்களாக மதிக்கப்பட்டுள்ள அனேக ஜாதியார்களுடைய நிலைமையும், வித்தியாப்பியாசமும் படிப்படியாக விருத்தியடைவது போலவே பெண்களின் கல்வியைப்பற்றியும் சிறிது கவனஞ் செலுத்துங்காலங்கிட்டியிருக்கிறது. இப்பேர்ப்பட்ட ஓர் நற்சமையத்தில் அன்னோர்களுடைய, கல்வியபிவிருத்திக்கு

அனுகூலமாகக் காணப்படும் சகல சாதகங்களையும் செய்வது நமது கருணை நிறைந்த சென்னைக் கவர்ன்மெண்டாரைப் பொறுத்த கடைமையாக விருக்கிறது. ஆகலால் பாலிகாபாடசாலைகளுக்கென்று இன்னம் இரண்டொரு இனிஸ்பெக்டரஸ்களை ஏற்படுத்துவதோடு அவசியமாகக் காணப்படும் அளவு சப்-அஸிஸ்டாண்டுகளையும் கூடியதுரிதத்தில் நியமிப்பார்களென்று எதிர்பார்க்கிறோம். டாக்டர் டங்கன் துரையவர்கள் வேலையைவிட்டு விலகும் காலம் மிகச் சமீபித்திருப்பதால் அதற்கு முன்னதாக அவரே இதைப்பற்றியோர் முடிவு செய்து விடுவாரென்றும் உறுதியாக நம்புகிறோம்.

உபாத்தியாயருக்கு உபயோகப் படத்தக்க தசசூத்திரங்கள்.

உபாத்தியைத் தொழிலை நடத்திவருபவர்களுக்கு அதிக உபயோகமுள்ளதாகக் காணப்படும் பத்து விதிகளை ஓர் வித்தியா சம்பந்தமான பத்திரிகை கூறுகிறது. அவையாவன:—

1. மாணாக்கர்கள் இடைவிடாது பிரயோசனமான விஷயங்களைச் செய்து முடிப்பதில் கருத்துள்ளவர்களாக இருக்கச்செய்வது உபாத்தியாயருடைய முக்கியமான கடமையாகும்.

2. ஒரு சமயத்தில் ஒருவகையாகவும், மற்றொருசமயத்தில் பின்னொருவகையாகவும் பொருட்களையும், கருத்துகளையும், சங்கதிகளையும் எடுத்துக்காட்டி மாணாக்கர் அவைகளைக்குறித்துப் பலவாறு யோசித்து நிதானிக்கும்படி செய்தல் தகுதியாம்.

3. காணப்படும் விஷயங்களைக் குறித்தெல்லாம் எழுதவும், விவரிக்கவும் பழகும்படி செய்யவேண்டும்.

4. மாணாக்கர்களுடைய கருத்துகளையும், பேச்சுகளையும் ஸ்தாபிக்கத்தக்க ருசுக்கள் கூறும்படி செய்யத்தகும்.

5. ஒரு பொருளைக்குறித்து தீர்க்கமான அறிவு ஏககாலத்தில் எவனுக்கும் உண்டாவது அசாத்தியமாதலால் பாடசாலையில் படிப்போர் தங்கள் அறிவீனத்தை மாத்திரம் கிரகித்துணரும்படி செய்வது நலமாகும்.

6. உபாத்தியாயர் தாமே சகலத்தையும் மாணாக்கர்கள் மனதில் திணிக்கும்படி முயலின் அவர்கள் சோம்பலுக்கு இடம்கொடுத்து, விருத்தியடைவதில் முயற்சியுள்ளவராகார்கள்.

7. பிழைகளை உடனுக்குடனே திருத்தக் கூடாது. மாணாக்கர்களைச் சூத்திரப்பாவை போலாட்டாமல் தங்கள் பிழைகளைத் தாங்களே திருத்திக்கொள்ளத்தக்க உபாயமனுசரிக்கவேண்டும்.

8. பிழையைத்திருத்திக்கொள்ளுங்காலத்தில் அவர்களுக்கு உறுதிமொழிகளெடுத்துரைத்துத் திருத்திவிட்டோமென்று பெருமை கொள்ளாது அடங்கி

யிருந்து, விருத்தி பெறுவதிலேயே கருத்துள்ளவர்களாயிருக்கத் தூண்டிவிடுதல் தகுதியாம்.

9. மானிடபுத்தி ஒருவகையாயிருந்த போதிலும் கவனித்தல், சம்மதித்தல், அறிவு பேதம் ஆகிய விஷயங்களால் பேதப்பட்டிருப்பது நிசமாதலால் மாணக்கர் உறுதியாய் எடுத்த விஷயத்தை விடாமுயற்சியோடு கூடி அவதானிப்பதே விருத்திபெற்றுச் புகழடைவதற்கேது வென்று அறியவேண்டும்.

10. மாணக்கர்கள் அந்தக்கரணங்களில் விருத்தி பெற்றுச் சுயமாய் அறிவில் தேறும்படியான திராணிபடைத்த மாத்திரத்தில் அவர்களுக்கு உபாத்தியாயர் காலாகாலங்களில் தக்க உதவியளித்து, தக்கபலன் பெறும்படி செய்ய முயலக்கடவர்.

———:O:———

ஆங்கிலேய நாட்டில் பள்ளிப்பிள்ளைகளின் பரிதாப நிலைமை.

உலகின் தேசங்கள் தோறும் ஒன்றற்கொன்று எதிரிடையான பல நடையுடைபாவனைகள் நடந்தேறிவருகின்றன. அவைகளிற் பல நவீன நாகரீகத்தேற்சிக்கேற்றவைகளாக விருப்பினுஞ் சில வெறுக்கத்தக்கவைகளாகவு மிருக்கின்றன.

நம் நாட்டில் அனேக கெட்டவழக்கங்கள் வேரூன்றியிருப்பதாகக் கல்விகேள்விகளிற் சிறந்த பல பண்டிதோத்தமர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். அது உண்மைதான், ஆனால் சிற்சில துர்வழக்கங்களாயினும் நடைபெறாத தேசங்கள் உலகில் எங்குமில்லை என்று தெரியவருகிறது. அவைகளிற் சில நம் நாட்டில் வழங்கிவருவதைப்போலிராவிடினும் அதற்கு முற்றும் எதிரிடையாயாவதிருக்கலாமென்பது மட்டும் உண்மை.

ஆனால் நம் நாட்டிற்கும் அவ்வந்நிய நாடுகளுக்கும் ஓர் பெருத்த வித்தியாசம் உண்டு. இங்கு தீமை என்று தோன்றிய ஓர் செய்கையை எளிதில் அகற்றி, நன்மையாகக்காணும் ஓர் வழக்கத்தைப் பற்றுவதரிது. அவ்வித அநாகரீகச் செய்கைகளைத் தருணம் நேரிடும்போதெல்லாம் பலருக்கும் விளக்கிக்காட்டி, அவற்றைப் போக்குவதற்கேற்ற செல்வாக்குள்ள சுஜனோபகாரிகள் முன்வருவதும்கிடையாது. ஒரு சமயம் தம்முழைப்பைச் சிறிதும் நோக்காது தேசக்ஷேமத்தின் பொருட்டு பாடுபடுபவர்களில் இரண்டொருவர் முன்வந்து, அவ்வித அவிவேகச் செய்கைகளிற் சிலவற்றையேனும் ஒழித்து, ஓர் நூதன நாகரீகத்தை யுள்நுழைக்க முயன்றாலோ ஊரடங்கலும் ஒன்றாய்ச்சேர்ந்து "ஐயோ; இது வரையில் நாம் கண்ணியமாகப்பாவித்து வந்த ஓர் விவேகியின் புத்திகெட்டுவிட்டதே, அப்பண்டிதன் கூறும் விஷயம் மேல்நாட்டு ஆங்கிலே

"இங்கிலாண்டில் பள்ளிக்கூடம் போகும் சிறுபிள்ளைகளுக்குபள்ளிக்கூடம்போகும் வேளைதவிர மற்றக்காலங்களிலும் வேலையுண்டு. மற்றக்காலங்களில்செய்யும் வேலையாவது ஜீவனத்துக்குபணம் சம்பாதித்தலேயாம். நாகரீகம் முற்றியிருப்பதாக சொல்லப்பட்ட அங்கிலேய நாட்டு ஜனங்களுள் இவ்வாறு நடப்பது மகா குரூரமான செய்கையென்று சொல்லவேண்டும். பிள்ளைகள் விஷயத்தில் பெற்றோர்களுக்கு பச்சாதாபமே கிடையாது. பள்ளிக்கூடத்து அதிகாரிகளும், பிள்ளைகள் பள்ளிக்கூடங்களுக்கு கிரமமாய் வந்துவிட்டால் அதுவே போதுமென்றும், அவர்களைப்பற்றிய மற்ற விஷயங்கள் தங்களுக்கு அவசியமில்லையென்றும் எண்ணிவிடுகிறார்கள். காலைமுதல் சாயந்திரம் இருட்டிப்போய் வெகுநேரம் ஆகிறவரையில் இடையில் பள்ளிக்கூடம் போகும் காலந்தவிர இச்சிறுபிள்ளைகள் வீதிகள் தோறும்போய் பால்விற்றுக்கொண்டு வரவேண்டுமாம். அல்லது சமாசாரப் பத்திரிகைகளாவது விற்றுக்கொண்டு வந்து அதினால்கிடைக்கும் கொஞ்சம் காசை தாய் தகப்பன்மாரிடம் சேர்க்க வேண்டுமாம். இப்படி காலையிலும் மாலையிலும் அலைந்துவிட்டு மத்தியான வேளையில் பள்ளிக்கூடம் போனால் அங்கு இவர்களுக்கு என்ன இலாபம். உபாத்திமார்கள் சொல்வது இவர்களுக்கு பலானதென்றே தெரியாது. தாங்கள் செய்வதும் இன்னதென்று தெரியாமலே தலையை ஆட்டிக்கொண்டு தூங்கி விழுந்துக்கொண்டிருப்பார்களேயன்றி உபாத்தியாயர் சொல்வது இவர்களுக்கு கொஞ்சமாயினும் காதில் நுழையப்போகிறதா? இல்லை. இத்துடன் வயிறு நிறைய சாப்பிடாமலும் பசியாயிருந்துவிட்டால் சொல்லவேண்டியதேயில்லை. காலையிலும் மாலையிலும் அலைந்து கஷ்டப்பட்டவர்கள் மத்தியானவேளையில் தூங்காமலும் அரைவயிற்று சாப்பாட்டுடனுமிருந்து, தங்கள் பாடங்களை அதிக சுறுசுறுப்பாய் கற்றுக்கொள்வதென்றால் எப்படி முடியும். இப்படியெல்லாம் செய்யும்படி கட்டாயப்படுத்துவது அவர்களுடைய பெற்றோர்களின் மடத்தனமேயன்றி வேறென்ன. அவ்வளவு நாகரீகம் தெரிந்த இங்கிலாண்டிலேயே இவ்வளவு குரூரச்செய்கைகள் நடப்பது ஆச்சரியம். இதுவிஷயத்தில் இந்தியர்களையே மேலாகச் சொல்லலாம். இதுவிஷயத்தைப்பற்றி இங்கிலாண்டில் எல்லா ஜனங்களும் சேர்ந்து ஏதாவது ஏற்பாடு செய்தால் எவ்வளவோ உபகாரமாயிருக்கும். "Factory Act" என்று ஓர் சட்டம் இருக்கிறது. அந்தசட்டத்தில் வேலைக்காரர்கள் ஒருநாளைக்கு இத்தனைமணி காலம்தான் வேலைசெய்யலாம் என்று ஓர் நிர்ணயம் உண்டு. அதைக்கூட லட்சியத்தில் வைக்காமல், இச்சிறு பிள்ளைகளிடத்திலிருந்து பெரியோர்கள் வேலை வாங்கிவருகிறார்கள். இந்த சங்கதியை ஸர் ஜான் கார்ஸடும் தெரிந்துகொண்டு இது விஷயமாய் தன் அபிப்பிராயத்தையும் வெளியிட்டிருக்கிறார். "ஸாடர்டே ரிவியூ" என்னும் பத்திரிகையில் ஒருவர், பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் வேலைசெய்துவரும் விஷயத்தைப்பற்றி இரண்டு உதாரணங்கள் எடுத்துக்காட்டுகிறார். "கர்ட்டு" என்னும் ஒரு பையன் பிரதிதினம் காலையில் ௬-மணிக்கு படுக்கையைவிட்டு எழுந்

திருக்கிறதாம். பள்ளிக்கூடம் போகவேண்டிய வேளைக்குள் ௫-பெயர்களுக்கு சமாசாரப்பத்திரிகைகள் கொடுத்தாகவேண்டுமாம். இவர்களில் அனேகம் பெயர் காலடுக்கு ஐந்தடுக்கு மெத்தைவீடுகளில் மேல்மெத்தையில் குடியிருப்பவர்களாம். பிரதிதினம் பள்ளிக்கூடத்துக்கு ௧௦-நிமிஷம் நேரம் சென்றுவருவானும். வந்தும் பாதிதூக்கம் தூங்கினதும் தூங்காததுமாக தலையாட்டிக் கொண்டு இருப்பானும். பள்ளிக்கூடம்விட்டானதும் கொஞ்சம்கூட விளையாட்டுக்கு அவகாசமில்லாமல் ஓர் ஷாப்பில் காகிதம் கொண்டுபோகும் பையனுகவிருக்கவேண்டுமாம். இராத்திரி ௧௦-அடித்தால் இவனுக்கு படுக்கை. மறுபடியும் விடியற்காலையில் ௪-மணிக்கு முன்னுள்போலவே எழுந்துவிடவேண்டுமாம்.

பிராஸ் என்னும் மற்றொருபையன் சாயந்திரம் பள்ளியிலிருந்து போனதும் ஓர் தீனிஷாப்பில் (Restaurant) அட்டெண்டராக இருக்கவேண்டும். அவனுக்கு சாப்பிடக்கூட அவகாசம் இல்லை. வேண்டியமட்டும் சாராயம் மட்டும் அகப்படலாம். இதை குடித்துக்கொண்டு. இரவு ஈ - மணிவரையில் கண் விழித்துக்கொண்டிருக்கவேண்டும். அங்கு கண்டவர்கள் கண்டபடி பேசுவதை காதுகுளிர கேட்டுக்கொண்டிருக்கலாம். இப்படியெல்லாம் இருப்பதால் அவர்களுடைய நடத்தையும் மாறிவிடுகிறது. இப்படியவர்கள் செய்துவரும் வேலை அவர்கள் தேகதிடனுக்கு மிஞ்சியதாகவே யிருக்கிறது. அவர்களுக்கு விளையாட்டுக்கு நேரமில்லை. ஞாயிற்றுக்கிழமையும் கிடையாது. மழை காலல் கிடையா. இப்படியெல்லாம் அவர்கள் கஷ்டப்படுவதால் அவர்களுக்கு படிப்பு ஏறுகிறதில்லை. ஆகையால் பள்ளிக்கூடம்போகிற பிள்ளைகளுக்கு இதரவேலைகள் இடக்கூடாதென்று அவர்கள் உபாத்தியாயர் சொல்லுகிறார். இதற்காக ஓர் சட்டம் உண்டுபண்ணி பள்ளிக்கூடம் போகிற பிள்ளைகள் இதரவேலைகள் செய்யவிடும் பெற்றோர்களுக்கு ஏதாவது சட்டப்படி தண்டனை விதிக்கவேண்டுமென்றும் மேற்சொன்ன "சாடர்டே ரிவியூ" என்னும் பத்திரிகையில் ஒருவர் எழுதியிருக்கிறார். இப்போது இங்கிலாண்டில் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகளில் எத்தனைபெயர்கள் வேலை செய்துவருகிறார்களென்று ஓர் கணக்கெடுத்துவருகிறார்கள். அந்த கணக்கு இந்த வருஷத்துக்குள் முடிவாகும். இங்கிலாண்டில் இப்படிப்பட்ட விஷயங்களில் சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமானால் அவைகளுக்கெல்லாம் தலைப்பாடாய் வேலைசெய்ய அசாமிகள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட விஷயங்களுக்கு வேலைசெய்ய இந்தியாவில் தான் நபர்கள் கிடையாது. இதுதான் இங்கிலாண்டுக்கும் இந்தியாவுக்கும் உள்ள ஓர் பெருத்த வித்தியாசம்."

யாவுக்கு வருஷவாரி ஏற்றுமதியாகிற எண்ணெயின் கிரயம் 25 லக்ஷம் ரூபாய்க்குக் குறையவில்லை.

கெரோசின் எண்ணெய் இவ்வண்ணம் தேசாந்தரங்களில் அகப்படுகின்றதென்பது மாத்திரமேயல்ல. இவ்விந்தியாவிலும் விசேஷமாய் அகப்படுமென்பதற்கு வேண்டிய குறிகள் இருக்கின்றன. பிரிட்டிஷ் பர்மாவையடுத்த ஒரு தீவு தொடங்கி அத்தேசத்தில் நெடுந்தூரம் பூமியில் கெரோசீன் எண்ணெய்பாய்ந்திருக்கின்றது. அங்கே சிலவிடங்களில் எண்ணெய் தடித்து அசுத்தமானதாயிருந்தாலும் சிலவிடங்களில் மிகவும் உத்தமமானதாயிருக்கின்றது. சீக்கிரத்தில் இவ்விந்தியாவிலேயே முதல்தரமான எண்ணெய் கண்டுபிடிக்கலாகுமென உறுதியாய்ச் சொல்லுகிறார்கள்.

கடைசியாய் இங்கே ஒருவார்த்தை சொல்லுகிறோம். இதைச்சற்று கவனியுங்கள். இந்த எண்ணெயில் உயர்ந்ததென்றும் மட்டமென்றும் இரண்டுவிதம் உண்டு. சென்ற சிலவருஷங்களாக மிகவும் மட்டமான எண்ணெய் இத்தேசத்திற்கு வந்துகொண்டிருக்கின்றது. யோசித்துப் பார்க்கையில் ஆதியில் அப்படியில்லை. கீழ்த்தரமான எண்ணெயி லுண்டாகும் ஆவி வெகு சீக்கிரத்தில் தீப்பற்றிக் கொள்ளும் தன்மையுடையதாகையால் அது அபாயத்துக்கிடமானது. இருந்தாற்போலிருந்து அவ்விதமான எண்ணெய் ஒவ்வொரு சமயங்களில் வெடித்துப் பெருந்தீங்கு விளைவிக்கும். ஆனது பற்றியே இவ்விந்தியாவைப் போன்ற உஷ்ண தேசங்களில் கீழ்த்தரமான கேரோசீன் எண்ணெயை ஒருபோதும் உபயோகிக்கக் கூடாதென்று துரைத்தனத்தாரே விளம்பரம் செய்திருக்கிறார்கள். ஆதலால் கெரோசீன் எண்ணெய் வாங்கி உபயோகிப்பவர்கள் சிறிது விலை அதிகமாயிருந்தாலும் அந்த எண்ணெயின் குணத்தை நன்றாய்க் கண்டறிந்து முதல்தரமான எண்ணெயையே வாங்கி உபயோகிக்கக்கடவார்கள். இல்லாவிட்டால் ஒவ்வொரு சமயங்களில் அதனால் பிரமாதங்கள் உண்டாகும். இவ்விஷயத்தில் கொஞ்சம் எச்சரிக்கையாயிருந்து உயர்ந்த வகையான எண்ணெய்களையே உபயோகித்து வருவோமானால் எவ்விதமான அபாயமும் உண்டாவதில்லை.

ஜ-வி.

வர்த்தமானக்குறிப்புகள்.

சென்ட்ரல் சர்க்கில் மகமதிய பாட்சாலைகளின் சப். அஸிஸ்டாண்டு இனிஸ்பெக்டராகிய மிஸ்டர். காஜாகான் சாகேப் அவர்களை சென்னப் பட்டணம் ஜில்லா பிரைமெரி பரீட்சை போர்டின் மெம்பராக நியமிக்கப் பட்டிருக்கிறது.

* * * * * * *

பார்ஸி தேசத்து ராஜாவாகிய ஷா அவர்களுடைய உக்காவின் மதிப்பு ரூபாய் பன்னிரண்டு லெட்சத்து எண்பதினாயிரமாம்; முழுவதும் இரத்தினங்களா லிழைக்கப்பட் டிருக்கிறதாம். பிரயோஜனமென்ன?

* * * * * * *

மனிதருடைய பற்களுக்குப் பதிலாக ஜெர்மனிதேசத்தில் காகிதத்தினால் பற்கள் செய்து உபயோகப் படுகிறதாம். அப்பற்கள் மிகவும் உறுதியாகவும் ஒடியாமலுமிருப்பதுடனே வாயில் ஊறும் எச்சிலாவது அதைச் சேதப்படுத்துகிறதில்லையாம். இவ்வகைப் பற்களினால் பணமதிகம் செலவாகாததுமல்லாமல் கனதியின்றி லேசாகவு மிருக்கிறதாம்.

* * * * * * *

அன்னந் தண்ணீரில்லாமற் ஜீவித்திருப்பதில் தத்தைகள் விசேஷம் உதித்தவைகள். சிலர் வேடிக்கை சாமான்களோடு தத்தையொன்றைப் பொட்டியிற் பூட்டிய ஒருவன் 6 வருஷம் சென்று திறந்து பார்த்தான். அவ்வளவு நாளாகியும் தத்தை செத்துப் போகவில்லையாம். இப்படிப்பட்ட சக்தி மனுஷனுக்கிருந்தாலோ இப்பொழுது செய்யும் அற்பவேலையுஞ் செய்யாது சோம்பல் மாளிகையிலே தூங்கினுந் தூங்குவான்.

* * * * * * *

சிலநாளுக்குமுந்தி மொகப்பூரில் பிலாண்டர்ஸ் கிளப்பண்டை மீன்மாரி பொழிந்தன. ஆகாயத்தில் மேகங் கருத்துத் திரண்டு அதினின்று மீன்கள் மேற்படி கிளப் வீட்டிற்குமுன் 30-40 அடி சதுரத்தில் விழுந்தன. இரசாயன சாஸ்திரியாகிய மிஸ்டர் இரான்சன்என்பவர் இந்தமீன்களிற் சிலதைப் பொருக்கி, யோர்வித திராவகத்தில் விட்டு அவைகளைச் சீமைக்குக் கொண்டு போகவிருக்கிறார். மேற்கண்ட மீன்மாரி பொழிந்த தேதியில் டெளபூர்தோட்டத்தில் பெய்தமழையில் சிறியமீன்கள் அநேகமாக விழுந்தனவாம். மேகத்திலிருந்து விழுந்த இந்தமச்சங்களை ஜனங்கள் பொருக்கிக்கொண்டதுமல்லாமல் பட்சிகளும் தவளைகளும் அவற்றில் சிலதை பட்சித்து விட்டன. மேகத்திலிருந்து விழுந்த மீன்களோடு மஞ்சள் நிறமான தவளைகளும் விழுந்தனவாம். இத்தவளைகள் எங்கிருந்து வந்தனவோ. நல்லகனத்தமழை பெய்யுமாகில் இச்செந்துக்கள் குளம், ஏரி, பள்ளங்கள் முதலிய இடங்களில் குடிபு

குந்துவிடும். இந்த மீன்கள் 24 அல்லது 36 மணி நேரத்தில் சுத்தமாய் மறைந்து விட்டதாம். பூமியின்கீழ் நாற்பதடி ஆழம் வரையில் வெட்டிப்பார்த்த போதிலும் இவ்வித மீன்களிலொன்றைக் காணக் கிடையாதாம். நமது பூதபௌதிக சாஸ்திரிகளும் இதுவிஷயத்தில் தகுந்த அபிப்பிராயங்கூற அறியாதவர்களாயிருக்கிறார்களாம். இதுவுங் கலியின் விநோதமே. வி. தி.

* * * * * * *

ஆப்பிரிக்காவின் மணல் வனாந்திரங்களிலும், சீரியா அல்லது சாம், அறபி முதலிய தேசங்களிலும் கொம்பு முளைத்த பாம்புகள் உண்டு. இவ்வகைப் பாம்புக்குப் புருவத்திற் கொரு கொம்பாக இரண்டு கொம்புகள் முளைத்திருக்கும். இவைகளுக்குக் கொம்பு சர்ப்பமென்றும், கோட்டுச் சர்ப்பமென்றும் பெயர். இக்கொம்புகளின் உபயோகம் இன்னதென்று திட்டந் தெரியாது; இவ்வகைச் சர்ப்பம் வெகு தந்திரமும் கொடுமையுமானவை; மணல்தான் அவைகளுக்கு உறைவிடம்; அவைகளின் நிறமும் சுத்தமாய் மணல் போலவே இருக்கும். இந்தப் பாம்புகள் உடலை மண்ணுக்குள் மறைத்துக் கொண்டு தலையைமாத்திரஞ் சற்றே வெளிக்காட்டி இரை பிடிப்பதற்கு வெகு உபயோகமாய்க்காத்திருக்கும்; அது எந்த நேருக்கும் மகா வேகத்துடன் செல்லும்; முன்னுக்கு மாத்திரமல்ல பின்னுக்கும் ஒரே சரியாகவும் வெகு விசையோடும் இவை பாயுமாம். ஒரு ஆளைச் சற்றப்பாலேல்கண்டு அவனைக் கடிக்க வேண்டுமென்று நோக்கங்கொண்டால், பராக்கு பார்த்தாற்போலே தலையைத் திருப்பிக்கொண்டு ஒரு சரிவாய் நகர்ந்து ஆளைச் சமீபித்தவுடன் சட்டென்று கொத்திக்கடித்துக் கொல்லும். இவைகளின்கடி மனுஷருக்கும் மிருகங்களுக்கும் மோசத்தை விளைக்கத் தக்கது. மணலுக்கும் அவைக்கும் வர்ணத்தில் வெகுவாய் வித்தியாசந் தோன்ற மாட்டாததினால் பிரயாணிகள் மிகுந்த கத்தளிப்போடு நடப்பார்கள். இந்தப் பாம்புகள் குதிரைகள் செல்லும்போது அவைகளின் பின்னங்காலில் கொத்துவது வழக்கம். கொத்தியவுடன் விஷம் ஏறிக் கால் திமிர்த்துப்போகக் குதிரை தன் பாகனோடுகூட மல்லாக்காக விழுந்து விடும்; இவைகளைவிட இன்னும் அநேகவிதமான சர்ப்பங்களும் அவ்வத்தேசவனங்களிற் சஞ்சரிப்பதாகப் பிரயாணிகளிற் சிலர் பிரத்தியக்ஷமாயக் கண்டிருக்கிறார்கள்.

ஆ. ப.

மரங்களைக்குறித்த பாடம்.

உபகரணங்கள்.—வேரும், மற்றெல்லாப் பாகங்களு முள்ள ஒரு சிறிய மரம். அனேக மரங்களின் படங்கள் பின்குறித்துள்ள சில சிறு இலைகள், பழங்கள் முதலியன.

ஆரம்பம்.—சாதாரணமாய் மாணாக்கர்கள் பார்க்கிற மரங்களின் உருவத்தைக்குறித்துச் சொல்லவும் சில சிறியவையாகவும் சில மிகப் பெரியவையாகவும் வளருகின்றன. சில தனிமையாக வளருவதையும், வேறுசில ஒன்றாய் அடர்ந்திருப்பதையும், குளிர் காலத்தில் மொட்டையாக விருப்பதையும், உஷ்ணகாலத்தில் இலைகள் நிறைந்து நிழல் தருவதையும் விஸ்தாரமான கிளைகளுடைத்தாயிருப்பதையும் தெரிவிக்கவும். இவைகள் மிக அழகும் உபயோகமு முள்ளன. மனிதர்களுக்கேயன்றிப் பிரதானமாய் மிருகங்களுக்கும் பட்சிகளுக்கும் நிழல் தருகின்றன. வெட்டினால் அனேகவிதமான மரச்சாமான்கள் செய்தற்குதவுவதோடு விறகுமாகின்றன.

I. **மரத்தின்பாகங்கள்.**—மரம் வளரும்பொழுது ஒருபாகம் பூமியில் மறைந்திருக்கிறது. அதன் பெயர் **வேர்**, பூமியில் நிலைஊன்றி நிற்பதின் பெயர் **அடிமரம்.** இதிலிருந்து நாலுபக்கமும் படர்ந்திருப்பது **கிளைகள்.** இவைகளில் அனேக கணுக்கள் உண்டு. இவைகளில் தான் இலைகள் உதிக்கின்றன. அனேக மரங்களில் அவைகளின்மேல் தான் புஷ்பங்கள் உண்டாகின்றன. பூக்கள் வாடியுதிர்ந்ததும் காய்களுண்டாகிப் **பழம்** ஆகின்றன. அவற்றுள் விதைகள் இருக்கின்றன. ஆக மரத்தின் பாகங்களாவன—**வேர், அடிமரம், கிளை, இலை, புஷ்பம், பழம், விதை.**

மரம் வளரும்பொழுது பூமியின்கீழ் மறைந்திருப்பதின் பெயரென்ன? கிளைகள், இலைகள் இவைகள் எங்கு உதிக்கின்றன? புஷ்பங்கள் உதிர்ந்ததும் உண்டாவதென்ன? விதை எதிலிருக்கிறது?

குறிப்பு.—இவைபோன்ற அனேக கேள்விகள் கேட்கவேண்டும். இந்தப் பாடத்தில் இன்னவிதமான கேள்விகள் கேட்கவேண்டுமென்று சிலமட்டும் குறிப்பாகக் காட்டுகிறோம்.

II. (1) **இப்பாகங்களின் உபயோகம்.**—வேர் பூமியில் என்ன செய்கிறது? அதனிடத்தில் மரத்தை நிறுத்துகிறது. அதனால் பிரயோசனமுண்டா? ஒரு செடியின் வேரை வெட்டிவிட்டால் என்ன ஆகும்? வதங்கி உலர்ந்துபோகும். ஆகையால் மரத்தை பச்சையாயிருக்கச் செய்வது வேர். ஆனால் இந்த சக்தி அதற்கு என்னவிதமாய் உண்டாகிறது? நீ மூன்றுவேளை சாப்பிடுவதால் வளருகிறாய். அதுபோலவே மரம் வளருவதற்கு அதற்கு ஆகாரம் வேண்டியது அவசியமல்லவா? மரத்துக்கு வேண்டிய ஆகாரம் வேரின் மூலமாய்க் கிடைக்கிறது. (விவரித்து உரைக்கவும்.) வேரின் உபயோகங்களென்ன? மரம் வளருவதற்கு ஆகாரம் எவ்விதம் கிடைக்கிறது.

(2) அடிமரத்தால் என்ன உபயோகம்? வெளிச்சத்திலும், காற்றிலும் மரத்தைத்தாங்கிக்கொண்டிருக்கிறது. கிளைகளுக்கும், இலைகளுக்கும் ஆகாரமாகிய

கெரோசீன் எண்ணெயைப்பற்றி.

—:o:—

(191 வது- பக்கத்தின் தொடர்ச்சி.)

கெரோசீன் எண்ணெய் பூமிக்குள் இன்ன விடத்தில் இருக்கிறதென்பது அதையடுத்த ஆகாயத்திலே வியாபித்திருக்கும் அதன் நாற்றத்தாலும், சிலவிடங்களில் அதையடுத்துள்ள குளம் குட்டைகளில் நீரின்மேல் எண்ணெய் படர்ந்திருப்பதனாலும் கண்டறியப்படுகின்றது. அவ்விடங்களெல்லாம் வெகுவாய்ப் பள்ளத்தாக்குகளாயும் சதுப்புநிலங்களாயுமிருக்கின்றன. அவ்விடங்களில் ஒரு வகை நாற்றமுள்ள காற்றினாலும் எண்ணெய் கலந்த தண்ணீர்குட்டைகளாலும பூமிக்குள் இன்னவிடத்தில் கெரோசீன் எண்ணெய் இருக்கின்றதெனக் காணப்பட்டவுடனே பல வேலைக்காரர்கள் அதற்கென்று செய்யப்பட்டிருக்கும் ஒரு யந்திரத்தை அவ்விடத்தில் கொண்டுபோய் அதனால் பூமியைத் தோண்டி 500-600 அடி ஆழத்தின் கீழ் உள்ள எண்ணெயை வெகு சுலபமாய் கண்டெடுப்பார்கள். ஆனால் ஒவ்வொரு சமயங்களில், பூமிக்குள் எண்ணெய் அதிகமாய் இருக்கிறதென்பதைக் குறிக்கின்ற குறிகளும் தெளிவாய்த் தெரிந்து அதைக்கண்டெடுப்பதற்கு வேண்டிய முயற்சிகளும் அதிகமாய்ச் செய்தாலும் எண்ணெய் அகப்படாமற் போவதும் உண்டு. சிலசமயங்களில் எண்ணெய் அபரிமிதமாய் அகப்படுவது போலிருந்து திடீரென்று தவறிப்போவதும் உண்டு. நன்றாய் உலர்ந்து போயிருந்த கிணறுகளில் விசேஷமாய் எண்ணெய் சுரப்பதும் உண்டு. இப்படிக் கெரோசீன் எண்ணெய் அகப்படுவது மிகவும் அநிச்சயமாயிருப்பதால் அநேகர் இவ்விஷயத்தில் அதிக கவலை கொள்கிறார்கள். சிலசமயங்களில் விசேஷமாக மூலதனம் வைத்து வேலை செய்யத் துவக்குகிறவர்களுக்கு ஒருபயனும் கிடைப்பதில்லை. ஒருசமயத்திலே போய்ச் சிறிதளவு முயற்சி செய்யும்போதே அளவற்ற எண்ணெய் கிடைக்கின்றது. அதனால் கெரோசின் எண்ணெய் அகப்படுகின்ற தேசங்களில் பலமாறுபாடுகள் உண்டாகின்றன. எதாவது ஒரு நடுக்காட்டில் எண்ணெய் அகப்படத்தொடங்கினால் அந்தநிமிஷமே அவ்விடத்தில் மாயையினால் அமைந்ததுபோல் ஒருபட்டணம் உண்டாகின்றது. எண்ணெய் சுரப்பது ஓய்ந்துபோன மறுநிமிஷமே அப்பட்டணம் அழிந்துபோகின்றது.

வெளியிலிருந்து புதிதாய்ப்போகின்றவர்களுக்கு அப்பட்டணங்களில் முதலில் சகிக்கக்கூடாத ஒருவகை வெடிப்பான நாற்றம் தோன்றுமாயினும், அவ்விடம் போன சிறிது நேரத்துக்கெல்லாம் அந்த நாற்றமே வழக்கமாகிப் பின்பு அதில் ஒருகெடுதியும் தோன்றுவதில்லை, அந்தவழக்கத்தினால் அநேகருக்கு மற்றத்

காற்றுகளைவிடக் கெரோசின் எண்ணெயின் நாற்றம் கலந்த காற்றை மோருவதிலேயே அதிகவிருப்ப முண்டாகின்றது. கேரோசீன் எண்ணெய்க் கிணறுகளினின்றும், மற்றெங்கும்பரந்த அந்த எண்ணெயினின்றும் எழுகின்ற ஆவியானது வெகுசீக்கிரத்தில் பற்றியெரியும் தன்மையுடையது. நெருப்பைக் கையாளும்போது சிறிது அஜாக்கிரதையாகக் கையாடினால் உடனே அது வெடித்துப் பெருந்தீங்குவிளைவிக்கும். வெடிமருந்து கிடங்குகளில் வாஸம்பண்ணுவதைப் பார்க்கிலும் இந்தக் கெரோசின் எண்ணெய்ப் பட்டணங்களில் வாஸம்பண்ணுவது மிகவும் அபாயத்துக்கு இடமான தென்கிறார்கள். இவ்வளவு அபாயம் விளைவிப்பதாயிருந்தும், கூடாதென்று விளம்பரம் செய்து எங்கும் பிரசித்தப்படுத்தினும், அவ்வளவையும் லக்ஷியம்பண்ணாமல் துணிந்து, அந்த எண்ணெய் எடுக்க வேலை செய்கிறவர்கள் சுருட்டுக் குடிப்பதை நிறுத்துவதில்லை.

இருந்தாற்போலிருந்து கெரோசின் எண்ணெய் தேசாந்தரங்களுக்குக் கொண்டுபோய் வர்த்தகம்செய்வதற்கு ஏற்றபொருளாய் அமைந்ததனாலும், அதைக் கண்டெடுப்பதற்கு வேண்டிய துணைக்கருவிகள் யாவும் ஏற்றவண்ணம் அமைந்திருப்பதினாலும், அந்த எண்ணெய் எடுத்து வியாபாரம் செய்ய முயன்றவர்களுக்குச்செல்வம் விசேஷமாய் விருத்தியாவதற்கு அது முக்கியாதாரமாயிற்று. இப்படி அவர்கட்கு எதிர்பாராச் செல்வம் அபரிமிதமாகக் கிடைக்கத் துவக்கியது. முன் இத்தேசத்து ஒயிநாட்டுச் சீமையிலே திடீரென்று பொன் காணப்பட்டதனால் சிலர் வெகு சீக்கிரத்தில் செல்வவான்களானது போன்றது. இப்போது அந்தத்தைலத்தின் விலை முன்னிருந்த விலையில் நான்கிலொன்றுக்கு அதிகப்படாதிருந்தாலும், அதனால் உண்டாகும் லாபம்மாத்திரம் அளவற்றிருக்கின்றது. அத்தேசத்தில் ஒரு சங்கத்தார் கெரோசீன் எண்ணெய்க் கிணறு முழுகுகிற நிமித்தம் இருபதினாயிரம் ரூபாய் செலவு செய்தார்கள். அவர் கோறினபடியே அவ்விடத்தில் எண்ணெய் விசேஷமாய் அகப்பட்டது. அகப்பட்ட ஒரு வாரத்திற்குள்ளேயே அந்த எண்ணெயைவிற்று முதலாகவைத்த பணத்தைப்போலப் பன்னிரண்டு பங்கு அதிகமானபொருள் சம்பாதித்தார்கள். ஆயினும் அவ்வளவோடே அந்த எண்ணெய் செலவழிந்து போகவில்லை. மிகுதி எண்ணெயை விற்பதனால் அதுமுதல் நாள்தோறும் சுமார் இரண்டாயிரம் ரூபாய் கிடைத்துக்கொண்டு வருகிறது. பயிர்செய்து அன்றாடம் ஜீவனம்பண்ணவும் சக்தியில்லாத அநேகம் எளிய குடியானவர்கள், தங்கள் நிலத்தில் இந்த எண்ணெய் அகப்படக்கண்டு அதனால் திடீரென்று விசேஷ தனவான்களானார்கள்.

சிலவருஷங்களாகக் கெரோசின் எண்ணெய் இவ்விந்துதேசத்திற்கு வெகு விசேஷமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றது. 1875-76 - ம் வருஷங்களில் 5,36,575 காலன் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கச் சென்ற நான்குவருஷங்களாக வருஷந்தோறும் அதைப்போல அறத்தனை அதிகம் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இவ்வருஷத்திலோ சுமார் 40,00,000 காலன் ஏற்றுமதியாகும். இவ்விந்தி

யர்களின் கொள்கையன்றோ? இது அவன் கற்ற இங்கிலீஷ் கல்வியினால் விளைந்த நாகரிகம்போலும். அதினால் சிறிது நன்மை இருந்தாலும் இருக்கலாம், ஆனால் நம்மிடம் இப்போது நடைபெற்றுவரும் பழக்கங்கள் யாவும் இந்துக்களின் பூர்வீக வழக்கமன்றோ? மனுகுலத்தாராகியநம்மூதாதைகள் அனுசரித்து வந்த ஓர் கருமத்தை இப்போது ஒழிக்கமுயல்வது கலிகாலத்தின் கூற்றாக முடியுமல்லவா? ஆரியர்களாகிய நமக்குரிய ஆசாரங்களனைத்தையும் அகோர தபசிகளாகிய பூர்வீக மகாருஷிகள் ஸ்தாபித்து, அதன்படி நமது பாட்டன் பூட்டன் காலமாக நடைபெற்றுவருவதை நம் காலத்தில் நீக்கிவிடுவது இயல்பல்லவோ. நாம் அவ்விதஞ்செய்தால் நம்மகாருஷிகள், பிதுர்தேவதைகள் முதலியவர்களின் கோபத்திற்கும், சாபத்திற்கும் ஆளாவோமல்லவா?" என்று பலவாறுகூறி, அத்தகைய சிறந்த தேசாபிமானியைப் பழிக்கத்தொடங்குவார்கள். இதனால் அந்நோர் முயற்சிகுன்றி, எடுத்த கருமத்தை இடையிலேதானே விட்டுவிட நேர்கிறது.

நம் தேசவாசிகள் அனுபவத்தில் அதிக தீமையாகக் காணும் ஓர் செய்கையின் பலனை அடைந்த பின்பாவது விட்டுவிடுவார்களென்று பார்த்தாலோ அதுவு மில்லை. நம் நாட்டில் எத்தனையோ சிறுவர்களின் உயிர் மாள்வதற்குக் காரணமாக விருப்பது அவர்களுக்கு அழகிற்காகப் போட்டுவைக்கும் ஆபரணங்களன்றோ? பெற்றோர் மூலை முடுக்குகளிலுள்ள ஆபரணங்களையெல்லாம் தம் சிறுவர்களுக்குப் போட்டுவைப்பதினால் திருடர்கள் அந்நகைகளினால் தாங்களடையும் சிறிது ஆதாயத்தை நாடி, அக்குழந்தைகளுக்கு ஆசைகாட்டித் தனியிடங்களுக் கழைத்துக்கொண்டுபோய், அவர்களைக் கொலைசெய்து, அவ்வாபரணங்களை அபகரிப்பது அனைவரும் அறிந்த விஷயந்தானே. இவ்வித கொலைபாதகச் செய்கைக்குக் காரணமாக விருப்பதாகிய சிறுவர்களுக்கு நகைகளைப்போடும் கெட்டவழக்கத்தை நீக்கும்படி எத்தனையோ தேசாபிமானிகள் பல பத்திரிகைகள் வாயிலாகவும், பிரசாரங்கள் மூலமாகவும் கண்டித்துக் கூறியிருக்கின்றனர். எத்தனையோ நியாயாதிபதிகள் இவ்விதச் சிசுக்கொலைகள் நேரிட்டு விசாரணைக்கு வரும்போதெல்லாம் அப்பிள்ளைகளின் பெற்றோரையும், அவ்வித வழக்கமுள்ள இதரர்களையும் பழித்திருக்கின்றனர். அப்படியிருந்தும் அத்துர்வழக்கம் ஒழிந்ததாவென்று பார்த்தாலோ எள்ளளவுங் கிடையாதென்றே சொல்லவேண்டியிருக்கிறது. வெனிில் இவ்விதக் கொலைகள் அடிக்கடி நேர்வதாகப் பல பத்திரிகைகளும் பரிதபித்துக் கூறிய வண்ணமாகவே யிருக்கின்றன. ஆனால் ஒன்று செய்தால் மட்டும் இவ்விதக் கொலைபாதகங்கள் ஒழியுமென்று எமக்குத் தோற்றுகிறது. அதாவது இவ்விதக் கொலைவியாச்சியங்கள் நியாயஸ்தலத்திற்கு வரும்போது அவ்வகைச் சிறுவர்களைக் கொன்ற திருடர்களுக்கு விதிக்கும் தண்டனையைப் பார்க்கிலும், அக்கொலைபாதகம் நேர்வதற்கு உடந்தையா யிருப்பவர்களைப்

போல் தம் சிறுவர்களுக்கு நகைகளைப் போட்டுவைக்கும் பெற்றோர்களுக்கு அதிக தண்டனை விதிக்கவேண்டுமென்பதே. இவ்விதமும் பல தடவைகளிற் செய்தால்மட்டும் இவ்வித வழக்கம் ஒருவாறு நீங்குமேயல்லது வேறு எவ்விதத்திலும் நீங்காதென்று நாம் அனுபவத்தில் கண்டிருக்கிறோம். தங்கள் உயிருக் குயிராகவிருக்கும் பிள்ளைகளின் விஷயத்திலேயே இவ்வளவு அநாதரவுசெய்து அவர்களின் உயிருக்கு உலைவைப்பதுபோல் நகைகளைப் போடும் ஓர் வழக்கமான பாதகத்தொழிலையே நீக்காமலிருப்பவர்கள் வேறு எதைத்தான் கவனிப்பார்களென்பதை நாம் எடுத்துக் காட்டவும் வேண்டுமோ? ஆகவே, நம் நாட்டில் ஆதியிலிருந்து நடைபெற்றுவரும் ஓர் வழக்கத்தினால் எவ்வளவு தீமை விளைந்தபோதிலும் அச்செய்கை நாளடைவிலேனும் ஒழிய வகையற்று இருப்பது பலரும் அறிந்த விஷயமே யாதலால் இதை இம்மட்டோடு நிறுத்துகிறோம்.

இதர நாடுகளில் உள்ளவர்களோ இவ்விஷயத்தில் நம் தேசவாசிகளுக்கு நேர் விரோதமான ஓர் நற்செய்கையை யுடையவர்களாக விருக்கின்றனர். அவர்கள் தீமை என்று மனதாறக்கண்ட ஓர் செய்கையை அதிக எளிதாகவே நீக்கிவிட்டு, காலதேசவர்த்தமானங்களுக் கியன்றபடி நடந்துகொள்வார்கள். அவர்கள் ஓர்வேளை அவ்வித தீச்செயல்களை ஏதேனுமோர் காரணம்பற்றி நீக்கிவிடத்தவறியபோதிலும், நிர்ப்பந்தஞ்செய்து சட்டமூலமாகவேனும் தடுக்கத்தக்க செல்வாக்குள்ள சுதேசாபிமானிகள் அநேகரிருக்கின்றனர். இவ்வொரு வித்தியாசத்தினால்தான் அந்நிய நாடுகளிலுள்ளவர்கள் தினேதினே விருத்தியாகிவருகையில் இத்தேசவாசிகள் வரவர க்ஷீணதிசையடைந்து வருபவர்களாக விருக்கின்றனர். இது நிற்க,

நவீன நாகரீகத்தேற்சியுள்ள தேசங்களுக்கோர் மகுடமெனவிளங்கும் ஆங்கிலேய நாட்டிலேயே நெடுநாட்களாக வழங்கிவரும் ஓர் கெட்டவழக்கம் தற்காலம் அங்குள்ளயாவராலும் கவனிக்கப்பட்டுவருகிறது. அதாவது, அங்குள்ள பெற்றோர் தங்கள் பிள்ளைகளை மிகக்கொடுமையாக நடத்துவதேயாம். அவ்வித கேடுகெட்ட ஓர் வழக்கம் நாகரீக முதிர்ச்சியுள்ள ஓர் நாட்டிலேயே இதுவரையில் யாதொரு விமோசனமுமின்றி வழங்கி வந்ததைப்பார்க்க அனைவர்களுக்கும் ஆச்சரியத்தை யுண்டாக்காமலிராது.

இவ்விஷயத்தை அத்தேசத்தில் வெளியாகும் "ஸாடர்டே ரிவியூ" என்னும் பத்திரிகையில் மிகக்கண்டித்து எழுதியிருப்பதைப்பற்றி இந்நகரின்கண் வெளியாகும் "இந்து" என்னும் பத்திரிகையில் அதனாசிரியர் சிறிது கூறியிருக்கின்றனர். இந்த விஷயத்தை நமது சகோதரப் பத்திரிகையாகிய "சுதேசமித்திரன்" தமிழில் மொழிபெயர்த்துப் பிரசுரித்திருப்பதால் அதையே இங்கு வெளியிடுவது போதுமென்று எண்ணுகிறோம். அதாவது:—

இலம் எதன்மூலமாய்ச் செல்லுகிறது? அடிமரத்தின் மூலமாகவே. ஆகையால் அடிமரத்தால் இரண்டுவிதமான பிரயோசனமுண்டு. அடிமரத்தைத் தோலைப்போல் மூடிக்கொண்டிருப்பதென்ன? பட்டை. சிலபட்டைகள் கரடுமுரடாயும், அழுத்தமாயுமிருக்கின்றன. வேறுசில தேகத்தின் தோல்போல் மெல்லியதாயிருக்கின்றன.

(3) இலைகளில் எத்தனையிருக்கின்றன பார்! அவைகளின் உருவங்களும் வடிவங்களும் பலவிதமாக விருப்பதைப் பார்! சில அகலமும், பெரிதும், உருண்டதும், வேறுசில நீண்டதும், அகலக்கட்டையானதும், கூரானதுமாகப் பேதப் பட்டிருக்கின்றன. கொலைகள் வழவழப்பும், கூருள்ளதுமாக விருக்கின்றன. செடிகளுக்கு ஆகாரந்தருவித்து வளரச் செய்வதற்கு உபயோகப்படுபவை இலைகள்தாம். அவைகளை யெல்லாம் கிள்ளி எறிந்துவிட்டால் செடி பட்டுப்போகும்.

(4) **புஷ்பங்கள்.**—இவைகள் மிகவும் அழகுள்ளன. சில கொத்துகளாகவும், சில தனியாகவும்வளரும். சிலகொத்துகள் செங்குத்தாய் நிற்கும். வேறுசில சங்கிலி கொலுசுகள்போல் கீழ்நோக்கிவளரும். அவைகளில் அநேகவர்ணங்களுண்டு. அவைகள் சடுதியில் போய்விடும். அவைகளின்மேல் இதழ்கள் காய்ந்து உதிர்ந்துவிடும். பின்பு காய்களுண்டாகிப் பழமாகின்றன

(5) **பழ.**—மென்றாலென்ன? தின்பதற்கு நன்றாயிருக்கும் வஸ்துகள் சில சொல்லு? சிலபழங்கள்தான் தின்ன உதவும். இவைகளும் பெரிதும் சிறிதுமாகவே இருக்கும். பழத்திற்குளளிருப்பதுதான் வித்து.

(6) **வித்து.**—சிலபழங்களைக்கொய்து காண்பிக்கவேண்டும். விதைகளும் உருவத்திலும், வடிவத்திலும், வர்ணத்திலும் பேதப்படுகின்றன. விதையின்பிரயோசனமென்ன? பூமியில் புதைத்தால் இருட்டிலே முளைகிளம்பிவருகின்றன. சிறிய வேர்கள் பூமியின்கீழ் சென்று முளைமட்டும் மேல்நோக்கி சிறிய செடியாகிப் பெரியமரமாய் வளருகிறது.

III. **மரத்தின் உபயோகம்.**—வளரும்பொழுது அவைகள் அழகாயிருக்கின்றன. தின்பதற்குப் பழங்கள் தருகின்றன. பட்சிகள் கூண்டு கட்டுவதற்கு இடந்தருகின்றன. அநேக ஜந்துக்கள் தங்குவதற்கு நிழல் தருகின்றன. வீடும் கப்பல் முதலியதும் கட்டுவதற்கு மரமாகின்றன. வீட்டுக்கு வேண்டிய மரச்சாமான்கள் பண்ணுவதற்கும், சில ஆயுதங்கள் செய்வதற்கும் உபயோகமாகின்றன. அடுப்பெரிப்பதற்குக் கட்டையாகின்றன.

உபாத்தியாயர்.

கெஜட்டு விளம்பரங்கள்

போர்ட் ஸெண்ட் ஜியார்ஜ் கெஜட்டு, 1898ஞு அக்டோபர் ...

உபாத்தியாயர்களின் காலேஜ் மூன்றாம் அஸிஸ்டாண்டும், பிரஸிடென்ஸி டிவிஷன் பாடசாலைகளின் ஆக்டிங் அஸிஸ்டாண்டு இனிஸ்பெக்டருமாகிய ம-ா-ா-ஸ்ரீ, சாத்தூர் சுவாமி அய்யர், பி. ஏ. அவர்களை ம-ா-ா-ஸ்ரீ, ஏ. சுப்பாராவ், பி. ஏ. அவர்கள் வேறுவேலையிலிருக்கும் காலம் வரையிலாவது, மறு உத்தரவுவரையிலாவது ஸீட்டிஸ்டிரிக்டு டிவிஷன் பாடசாலைகளின் ஆக்டிங் அஸிஸ்டாண்டு இனிஸ்பெக்டராக நியமிக்கப்பட்டிருக்கிறது.

போர்ட் ஸெண்ட் ஜியார்ஜ் கெஜட்டு, 1898ஞு அக்டோபர் மீ 18௳.

கும்பகோணம் காலேஜ் ஆக்டிங் பிரன்ஸிபல் ராய் பஹதூர் கே. நாகோஜிராவ் அவர்களுக்கு உதவிவரும் தேதியிலிருந்து இரண்டுமாதங்களுக்குப் ப்ரிவிலீஜ் ரஜா கொடுக்கப்பட்டிருக்கிறது.

சென்னை கரல்ஸ் ரேஞ்சு மிஸ். எஸ். கோவிந்தராஜுலு அவர்களுக்கு உதவிவரும் தேதியிலிருந்து ஒருமாத ப்ரிவிலீஜ் ரஜா கொடுக்கப்பட்டிருக்கிறது.

சேலம் கவர்ன்மெண்டு டிரெயினிங் கல்விச்சாலையின் ஆக்டிங் எட் மாஸ்டர் ம-ா-ா-ஸ்ரீ, கே. பஞ்சாபகேச அய்யர் அவர்களை மிஸ். எஸ். கோவிந்தராஜுலு அவர்கள் ரஜாவிலிருக்கும் காலம்வரையில் சென்னை கர்ல்ஸ் ரேஞ்சுபாடசாலைகளின் ஆக்டிங் சப்-அஸிஸ்டாண்டு இனிஸ்பெக்டராக நியமிக்கப்பட்டிருக்கிறது.

போர்ட் ஸெண்ட் ஜியார்ஜ் கெஜட்டு, 1898ஞு அக்டோபர் மீ 25௳.

பாடசாலைகளின் அஸிஸ்டாண்டு இனிஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ. சி. என். சுப்பிரமணிய அய்யர் அவர்களுக்கு இரண்டுமாத ப்ரிவிலீஜ் ரஜாகொடுக்கப்பட்டிருக்கிறது.

தஞ்சாவூர்- திருச்சிறாப்பள்ளி டிவிஷன் பாடசாலைகளின் அஸிஸ்டாண்டு இனிஸ்பெக்டரும், நார்தரன் சர்க்கில் பாடசாலைகளின் ஆக்டிங் இனிஸ்பெக்டருமாகிய ம-ா-ா-ஸ்ரீ, லூயிஸ் கிறிஸ்டியான் வில்லியம்ஸ் பிள்ளை அவர்களை சதரன் சர்க்கில் பாடசாலைகளின் ஆக்டிங் இனிஸ்பெக்டராக நியமிக்கப்பட்டிருக்கிறது.

மதுரை- திருநெல்வேலி டிவிஷன் பாடசாலைகளின் அஸிஸ்டாண்டு இனிஸ்பெக்டரும், சதரன் சர்க்கில் பாடசாலைகளின் ஆக்டிங் இனிஸ்பெக்டருமாகிய ம-ா-ா-ஸ்ரீ. டி. எஸ். கிருஷ்ணசுவாமி அய்யர் அவர்களை ஆற்காடு டிவிஷன் பாடசாலைகளின் ஆக்டிங் அஸிஸ்டாண்டு இனிஸ்பெக்டராக நியமிக்கப்பட்டிருக்கிறது.

NOTICE.

JUST OUT! **READY FOR SALE.**

Important to Managers and teachers of all Primary schools in the Madras Presidency.

MADRAS EDUCATIONAL RULES IN TAMIL.

Contains chapters I to V and Appendix to chapters II, III & V of the English second edition of the Madras Educational Rules as far as applicable to the primary schools.

Price per copy 4 Annas—Postage 1 Anna extra.

A discount of 15 per cent. will be allowed to those who purchase not less than 50 copies at a time.

Only a limited number of copies printed. Apply early, to save disappointment, to

THE MANAGER,
Tamil Journal of Education, Madras.

23rd Nov. 1897.

மட்றாஸ் எடியுகேஷனல் ரூல்ஸ் எனப்படும்

சென்னை வித்தியா சம்பந்தமான விதிகள்.

அங்கீகாரஞ் செய்யப்பட்ட பாடசாலைகளின் மானேஜர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும் அத்தியாவசியமாகிய இப்புத்தகம் இங்கிலீஷில் மட்டும் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அப்புத்தகத்தை காளதுவரையில் கவர்ன்மெண்டார் தமிழில் மொழிபெயர்த்துப் பிரசுரியாததால் ஆங்கிலேயபாஷையில் பயிற்சியற்ற கிராமபாடசாலை உபாத்தியாயர்களுக்கு அதனாற்சிறிதும்பயனின்றியிருப்பதுடன் அவர்களுக்கு வித்தியாசட்ட சம்பந்தமாகிய ஞானம் சிறிதுமில்லாமலுமிருக்கிறது. இதையனுசரித்துப் பலவித்தியாதிகாரிகள் கோரிக்கொண்டபடி அப்புத்தகத்தில் பிரைமெரி பாடசாலைகளுக்குச் சம்பந்தப்படுகிறவரையில் ஒவ்வொருபிரிவையும் தெளிவாகமொழிபெயர்த்து அச்சிட்டு விற்பனைக்குச் சித்தமாகவிருக்கிறது. சிலபிரதிகளே அச்சிடப்பட்டதால் வேண்டியவர்கள் உடனேதெரிவிக்கவேண்டும். புத்தகம் தேவையானவர்களுக்கு வாலியுபேயபில் போஸ்ட்மூலமாக அனுப்பப்படும்.

பிரதி 1 க்கு விலை அணா நான்கு.

தபாற்கூலியும், வாலியுபேயபில் கமிஷனும் பிரத்தியேகம். இப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னை வித்தியாவர்த்தமானி என்னும் "தமிழ் ஜர்னல் ஆப் எடியுகேஷன்" பத்திரிகையின் மானேஜருக்கு உடனே எழுதிக்கொள்ள வேண்டும்.

THE

TAMIL JOURNAL OF EDUCATION

MADRAS.

The only Monthly Journal of its kind in Southern India. Published with the Permission of the Educational Authorities.

This is intended for teachers of Primary and Lower secondary schools, students under training and all those interested in Primary Education.

Recommended for use in all the Govt. Girls' schools as well as in Board schools.

		Rs. A. P.
ANNUAL SUBSCRIPTION (INCLUDING POSTAGE)	...	1—8—0
TO BE PAID IN ADVANCE		
FOR PATRONS (MINIMUM)	...	3—0—0
FOR A SINGLE COPY	...	0—3—0

Was started in October 1896 :—Only a few copies of the back volumes available.

All Communications, money orders, books for review, &c., should be addressed to

THE MANAGER,
"TAMIL JOURNAL OF EDUCATION"
Madras.

P. S.—Literary contributions to the Journal on useful subjects will be thankfully received by the Editor.

வித்தியாவர்த்தமானி.

வித்தியாவிலாகா உத்தரவின்பேரில் பிரசுரிக்கப்படும் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தபாற்கூலியோடு வருஷத்திய கையொப்பம்	ரூபா 1—8—0
அத்தியக்ஷகர்களுக்கு (குறைந்தது)	" 3—0—0
தனிப்பத்திரிகை	" 0—3—0

முன்பணமின்றி யாருக்கும் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

கையொப்பபணமின்றி வரும் உத்தரவுகளை ரிஜிஸ்தர் செய்துகொள்ள முடியாது. பணமின்றி உத்தரவுமட்டும் வரின்பத்திரிகையை வாலியூபேயபில் போஸ்ட்மூலமாய் அனுப்பி பணம் பெற்றுக்கொள்ளலாகும்.

இப்பத்திரிகையைக் குறித்து இன்னும் ஏதேனும் அறிய விரும்புகிறவர்களும், மணியார்டர் முதலியன அனுப்புவோரும் சென்னை வித்தியாவர்த்தமானி என்னும் "தமிழ் ஜர்னல் ஆப் எடிகேஷன்" பத்திரிகையின் மானேஜருக்கு அனுப்பவேண்டும். பதில்வேண்டுவோர் அரையணா லேபிலாவது ரிப்ளை கார்டாவது அனுப்பவேண்டும்.

220765